தின கனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 251 | 4 Pages | 9.4.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 251 | 4 பக்கங்கள் | 9.4.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமங் கெடக்கெடு நோய்**

**விளக்கம்:**

விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக் குற்றங்கள் மூன்றனுடைய பெயரும் கெடுமாறு ஒழுகினால் துன்பங்கள் வராமற் கெடும்.

# பல்கலைக்கழகங்களின் வேந்தராகிறார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, ஏப். 9

மசோதாக்கள், துணைவேந்தர்கள் நியமனத்துக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் கவர்னருக்கு உத்தரவிடக்கோரி தமிழக அரசு தாக்கல் செய்த ரிட் மனு மீது சுப்ரீம் கோர்ட்டு இன்று தீர்ப்பளித்துள்ளது. நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்:


தமிழக சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்படும் என்று சுப்ரீம் கோர்ட்டுக்கு சிறப்பு அதிகாரங்கள் வழங்கும் சட்டப்பிரிவு 142ன் படி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதாவது, தமிழக அரசு அனுப்பிய 10 மசோதாக்கள் மீது கவர்னர் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் ரத்து செய்யப்படுகின்றன. இந்த மசோதாக்கள் கவர்னரிடம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்டதாகக் கருத்தில் கொள்ளப்படும் என்று தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.



இந்த நிலையில், தமிழ்நாடு பல்கலைக்கழக சட்டத் திருத்த (2வது) மசோதா உட்பட 10 மசோதாக்களுக்கு சுப்ரீம் கோர்ட்டு ஒப்புதல் அளித்திருப்பதால் கவர்னருக்கு பதிலாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இனி பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகங்களின் வேந்தர் பதவிகளில் இருந்து கவர்னர் நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## விவிபாட் சீட்டுகளை 100 சதவீதம் எண்ணக்கோரிய மனு தள்ளுபடி



புதுடெல்லி, ஏப்.9

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் (EVM) கட்டுப்பாட்டுப் பிரிவால் மின்னணு வாக்கு எண்ணிக்கையுடன் கூடுதலாக விவிபாட் சீட்டுகளை 100 சதவீதம் கைமுறையாக எண்ண வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு (ECI) உத்தரவிடக் கோரிய மனுவை சுப்ரீம்கோர்ட்டு நேற்று ( திங்கள்கிழமை) தள்ளுபடி செய்தது.

முன்னதாக ஹன்ஸ்ராஜ் ஜெயின் என்பவர், 'விவிபாட்' சீட்டுகளை 100 சதவீதம் எண்ண உத்தரவிடக்கோரி, டெல்லி ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அந்த சீட்டுகள் துண்டாகி வெளியே வந்தவுடன், வாக்காளர்கள் சரிபார்த்து விட்டு, அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் முறையை அமல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஆனால், அந்த மனுவை டெல்லி ஐகோர்ட்டு கடந்த ஆண்டு ஆகஸ்டு 12ந் தேதி தள்ளுபடி செய்தது.

அதைத்தொடர்ந்து, அதே கோரிக்கையுடன் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். அம்மனு, தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போதுதலைமைநீதிபதிகூறுகையில்,"முன்புஇதேகோரிக்கையை எழுப்பிய மனுக்கள் மீது எனது தலைமையிலான அமர்வு தீர்ப்பு அளித்துள்ளது. மீண்டும் மீண்டும் விசாரிக்க முடியாது. டெல்லி ஐகோர்ட்டு உத்தரவில்தலையிடுவதற்கானநல்ல முகாந்திரம் இல்லை. ஆகவே, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று தெரிவித்தார்.

## பரஸ்பர உறவில் இருந்துவிட்டு.. உறவு கசக்கும்போது கற்பழிப்பு வழக்கு தொடர்வதா? சுப்ரீம் கோர்ட்டு கண்டனம்



புதுடெல்லி, ஏப்.9

கொல்கத்தாவில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர் மீது ஒரு பெண் ஒருவர் கடந்த 2014ம் ஆண்டு புகார் அளித்திருந்தார்.

ஏற்கனவே திருமணமான அந்த முன்னாள் நீதிபதி, மனைவியை விவாகரத்து செய்து விட்டு, தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி, தன்னுடன் நெருக்கமாக இருந்ததாகவும், ஆனால் பின்னர் திருமணத்துக்கு மறுத்து விட்டதாகவும் கூறியிருந்தார். அதன்பேரில், போலீசார் முன்னாள் நீதிபதி மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்தனர். கொல்கத்தா ஐகோர்ட்டு, முன்னாள் நீதிபதி மீதான வழக்கை ரத்து செய்ய மறுத்துவிட்டது. அதை எதிர்த்து அவர் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார்.

மேல்முறையீட்டை விசாரித்த நீதிபதி பி.வி.நாகரத்னா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு, கொல்கத்தா ஐகோர்ட்டு அளித்த உத்தரவை ரத்து செய்ததுடன், முன்னாள் நீதிபதிக்கு முன்ஜாமீன் வழங்கியது.

இதுதொடர்பாக நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறுகையில், "ஆணும், பெண்ணும் பரஸ்பர உறவில் இருந்துவிட்டு, அந்த உறவு கசக்கும்போது குற்றவியல் வழக்கு தொடரும் போக்கு அதிகரிப்பதை கவனித்து வருகிறோம். எல்லா பரஸ்பர உறவையும், 'திருமணம் செய்து கொள்வதாக உறுதி அளித்து ஏமாற்றினார்' என்று முத்திரை குத்த முடியாது. இருவருக்கும் இடையிலான உறவு சம்மதத்துடன் கூடியது. பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக நடந்ததாக கூற முடியாது. அதை கற்பழிப்பு என்று வாதிட முடியாது" என்று கூறினர்.

## வெஜ் பிரியாணி ஆர்டர் செய்த வாடிக்கையாளருக்கு சிக்கன் பிரியாணி டெலிவரி; உணவக ஊழியர் கைது

லக்னோ, ஏப்.9

உத்தரபிரதேச மாநிலம் நொய்டா பகுதியை சேர்ந்த இளம்பெண் ஆன்லைன் உணவு டெலிவரி ஆப் ஸ்விகி மூலம் லக்னோயி கபாப் பரோட்டா உணவகத்தில் வெஜ் பிரியாணி ஆர்டர் செய்துள்ளார்.

இதையடுத்து, உணவ ஊழியர் அந்த வாடிக்கையாளருக்கு வெஜ்பிரியாணியை டெலிவரி செய்துள்ளார். பிரியாணி பார்சலை பிரித்து பார்த்தபோது வெஜ் பிரியாணிக்கு பதில் நான்வெஜ் சிக்கன் பிரியாணி கொடுக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளரானஅப்பெண்பிரியாணியைசிறிதுசாப்பிட்டுள்ளார். அப்போது அது சிக்கன் பிரியாணி என்பது தெரியவந்ததால் அதிர்ச்சியடைந்தார்.

இதையடுத்து, ஆர்டரை ரிட்டன் செய்ய முயற்சித்துள்ளார். அதற்குள் அந்த கடை மூடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சமூகவலைதளத்தில் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்வீடியோ வெளியிட்டார். வெஜ் உணவு மட்டுமே சாப்பிடும் எனக்கு வேண்டுமென்றே சிக்கன் பிரியாணி கொடுக்கபப்ட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த வீடியோ அடிப்படையில்தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்த போலீசார், வாடிக்கையாளருக்கு வெஜ்பிரியாணிக்கு பதில் நான்வெஜ் பிரியாணி பார்சல் செய்த உணவக ஊழியரை கைது செய்தனர். மேலும், இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கொண்டத்து காளியம்மன் கோவிலில் குண்டம் திருவிழா: சிறப்பான தேரோட்ட நிகழ்வு



தனியார் பள்ளிகள் மூலம் இயக்கப்படும் 10க்கும் மேற்பட்ட பேருந்துகள், மாணவர்களை அழைத்துச் செல்வதற்காக யுகேசி நகருக்குள் வந்து செல்கின்றன. இது தவிர ஏராளமான இரு சக்கர வாகனங்கள், கார்கள் அதிகளவில் வந்து செல்லும் பகுதியாகவும் யுகேசி நகர் உள்ளது. இப்பகுதியில் சாலையின் நடுவே மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளதால், பள்ளி வாகனங்கள் உட்பட கனரக வாகனங்கள் எளிதாக சென்று திரும்ப முடியாத நிலை உள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இது குறித்து நகராட்சி கவுன்சிலர் அப்துல் கயூம்கூறும்போது, "நீண்டகாலமாக இருந்து வரும்இப்பிரச்சினைகுறித்துநகராட்சிக்கும், மின்வாரியத் துக்கும் பலமுறை கோரிக்கை மனுக்கள் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மின் கம்பங்கள் சாலையின் நடுவே உள்ளதால் பொதுப் போக்கு வரத்துக்கு கடுமையாக பாதிக்கிறது. எனவே சாலையின் நடுவே உள்ள மின் கம்பங்களை உடனடியாக அகற்றி, சாலையோரமாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

## திருத்தணி நியூ ஈடன் ஆங்கில பள்ளி 20ஆவது ஆண்டு விழா




திருத்தணி நியூ ஈடன் ஆங்கில பள்ளி 20ஆவது ஆண்டு விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

திருத்தணி அருகே அமைந்துள்ள நியூ ஈடன் ஆங்கில மேல்நிலைப் பள்ளியின் 20ஆவது ஆண்டு நினைவு விழா விமர்சையாக நடைபெற்றது. விழாவிற்குத் தலைமை விருந்தினராக திரு. கே.பி.எஸ். விஸ்வநாதன், M.Com., M.Phil., Ph.D., மாவட்ட லயன் கிளப் தலைவர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கௌரவ பிரதம விருந்தினராக திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு. எஸ். சந்திரன், எம்.ஏ., பி.எல்., கலந்து கொண்டு விழாவிற்கு சிறப்பு சேர்த்தார். கௌரவ சிறப்பு விருந்தினர்களாக சின்னத்திரை மற்றும் திரைப்பட உலகில் பிரபலமான ‘Sun TV’ புகழ் ‘சிங்கப்பெண்ணே’ நடிகை சவுண்ட் சௌந்தர்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னாள் மாணவர்கள் கௌரவிப்பு: விழாவில் முன்னாள் மாணவர்களான “Voice of VASANTHAN” எம். விக்னேஷ், சினிமா தயாரிப்பு மேலாளரும் ஜீ தமிழ் சாரெகமாபா நிகழ்ச்சியில் புகழ் பெற்ற கே. கார்த்திக் மற்றும் தேசிய அளவில் தங்கப் பதக்கம் வென்ற குத்துச்சண்டை வீரர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். நன்றி உரையாற்றியவர்கள்: திரு. டி. ரகுநாதன், பி.ஏ., மற்றும் முன்னாள் துணைத் தலைவர்




## மத்திய மந்திரி குன்னூர் வருகை

நீலகிரி, ஏப்.7

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டனில் ராணுவ பயிற்சி கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் ராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய முப்படை அதிகாரிகள் மட்டுமின்றி, இந்தியா நட்பு நாடுகளின் முப்படை அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் நடக்கும் நிகழ்ச்சிகளில் மிக முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் நாளை மறுநாள் (வியாழக்கிழமை) பட்டமளிப்பு விழா நடக்கிறது. விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ்நாத்சிங் கலந்து கொள்கிறார். இதற்காக அவர் நாளை (புதன்கிழமை) டெல்லியில் இருந்து சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு மாலை 4.25 மணிக்கு கோவை சூலூர் விமானப்படை தளம் வருகிறார். அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு வெலிங்டன் ராணுவ கல்லூரிக்கு வருகிறார். அங்கு இரவு தங்கி ஓய்வெடுக்கிறார். இதைத்தொடர்ந்து நாளை மறுநாள் காலை வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகிறார். விழா முடிந்ததும் சூலூர் விமானப்படை தளத்துக்கு சென்று, அங்கிருந்து டெல்லி புறப்படுகிறார். மத்திய மந்திரி வருகையையொட்டி வெலிங்டன் ராணுவ பயற்சி கல்லூரியில் முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதேபோல் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

## டாஸ்மாக் வழக்கு தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு கண்டனம்



சென்னை, ஏப்.9

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த மார்ச் 6ந்தேதி முதல் 8ந்தேதி வரை மத்திய அமலாக்கத்துறை திடீர் சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இந்த சோதனையின் அடிப்படையில் டாஸ்மாக் அதிகாரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தடை கேட்டும், இந்த சோதனை சட்டவிரோதம் என்று அறிவிக்க கோரியும் சென்னை ஐகோர்ட்டில் தமிழ்நாடு அரசு, டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் ஆகியோர் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கிற்கு மத்திய அமலாக்கத்துறை பதில் மனு தாக்கல் செய்தது. இந்த பதில் மனுவுக்கு பதில் அளிக்க தமிழ்நாடுஅரசுதரப்பில்காலஅவகாசம்கேட்கப்பட்டது. இதையடுத்து, பதில் மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்யவும், இந்தவழக்கில்இடையீட்டு மனுதாரர்களாக சேர்ந்துள்ளவர்களின் மனுவுக்கு பதில் மனுவையும் அனைத்து தரப்பினரும் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கின் இறுதி விசாரணை 8ந்தேதி (இன்று) மற்றும் 9ந்தேதி (நாளை) நடைபெறும் என்று ஐகோர்ட்டு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் உத்தரவிட்டது.

இந்தநிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு இன்று காலையில் சுமார் 11 மணிக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மாநில அரசுதரப்பில் விசாரணையை தள்ளிவைக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் இந்த வழக்கை 2.15 மணிக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்தனர். அப்போது, அரசு தரப்பில், இந்த வழக்கை சுப்ரீம் கோர்ட்டு விசாரிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தலைமை நீதிபதி அமர்வில், அடுத்த சில நிமிடங்களில் விசாரணைக்கு வர உள்ளது. அதனால், இந்த வழக்கை தள்ளிவைக்க வேண்டும்'' என்று மீண்டும் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள், ''அமலாக்கத்துறை சோதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளஇந்தவழக்கு, பொதுநலனுக்காகவா? அல்லது டாஸ்மாக் அதிகாரிகளுக்காகவா? இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, பதில் மனு தாக்கல் செய்ய தமிழ்நாடு அரசு அவகாசம் கேட்டது. இந்த வழக்கு இந்த ஐகோர்ட்டு டிவிசன் பெஞ்சில் விசாரிப்பதற்கு அப்போது எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. ஆனால், இந்த ஐகோர்ட்டில் எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்காமல், சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு திடீரென வழக்கு தொடர்ந்த காரணம் என்ன? அந்த காரணத்தை முதல் நாளே இந்த ஐகோர்ட்டில் தெரிவித்து இருக்கலாமே? ஏன் அதை செய்யவில்லை?

மிழ்நாடு அரசு சட்ட நடைமுறையை ஏன் தவறாக பயன்படுத்துகிறது? இந்த ஐகோர்ட்டை ஏன் அவமானப்படுத்த வேண்டும்? இன்று காலையில் கூட சுப்ரீம்கோர்ட்டில்வழக்குதொடர்ந்ததைஏன்எங்களுக்கு சொல்ல வில்லை? இறுதி விசாரணைக்கு பட்டியலிட்ட பிறகு சுப்ரீம் கோர்ட்டு ஏன் செல்ல வேண்டும். சுப்ரீம் கோர்ட்டை தமிழ்நாடு அரசு அணுக உரிமை உள்ளது. அதேநேரம், ஏன் இந்த ஐகோர்ட்டுக்கு தகவல் தெரிவிக்காமல் செல்ல வேண்டும்?'' என்று சரமாரியாக கேள்விகளை கேட்டனர்.

அதற்கு அரசு தரப்பு வக்கீல், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்குதான் அமலாக்கத்துறை பதில் மனு அரசுக்கு கிடைத்தது. அதன்பின்னர், அரசு தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது என்றார். இதையடுத்து, இந்த வழக்கை பிற்பகல் 2.15 மணிக்கு விசாரிப்பதாக கூறி நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# சென்னை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த ஆண்டு ஆதி வனம் திட்டம்: அமைச்சர்



சென்னை, ஏப்.9

சட்டப் பேரவை கேள்வி நேரத்தின் போது பென்னாகரம் ஜி.கே. மணி (பாமக) பேசுகையில், "பசுமை பரப்பினை அதிகரித்து கால்நடை மாற்றத்தின் வீரியத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?" என்றார். இதற்கு பதில் அளித்து வனத்துறை அமைச்சர் பொன்முடி பேசுகையில், "பசுமை, சுற்றுச்சூழலை பாதுகாக்க கடந்த மூன்று ஆண்டுகளில் 10.86 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. 25 கோடி ரூபாய் செலவில் தமிழகம் முழுவதும் 100 மரகத பூஞ்சோலைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடற்கரையில் சூறாவளி காற்று பாதிக்காமல் இருப்பதற்கு 25 கோடி ரூபாய் உயர் அரண் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த 3 ஆண்டுகள் அது செயல்படுத்தப்படும். சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஆதிவனம் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், காலநிலை மாற்றத்தினை வீரியத்தை குறைக்கவும் தமிழக அரசு பசுமை தமிழ்நாடு இயக்கம் கடந்த 2021 முதல் செயல்படுத்தி வருகிறது" என்றார்.

# சேலம், திண்டுக்கல், குமரியில் மழை; வாழை மரங்கள் முறிந்தது: மின்கம்பம் சாய்ந்து வீடுகள் சேதம்



சென்னை, ஏப்.9

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கோடை மழை நீடித்து வருகிறது. சேலம் மாவட்டம், இடைப்பாடியை சுற்றியுள்ள இடங்களில் நேற்று முன்தினம் மாலை பரவலாக மழை பெய்தது. பலத்த மழையால் இடைப்பாடி பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கட்சி பேனர்கள் கிழிந்து கீழே விழுந்தது. மேலும், சூறைக்காற்றுக்கு சாலைகளில் புளியமரம், வேப்பமரம், புங்கமரம் முறிந்து விழுந்தது. பல பகுதிகளில் மின்சார கம்பங்கள் உடைந்து விழுந்தது. இதனை அதிகாரிகள் உடனடியாக சீரமைத்தனர்.

மேலும், பூலாம்பட்டி, தாதாபுரம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட பகுதிகளில் 3000க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் அடியோடு சாய்ந்தது. தாதாபுரம் ஊராட்சி வட்டக்காடு பகுதியில் நேற்று முன்தினம் பெய்த மழையில் 800க்கும் மேற்பட்ட செவ்வாழை மரங்கள் காற்றுக்கு சாய்ந்தது. இதனால், விவசாயிகளுக்கு பல லட்சம் சேதமானது.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் மற்றும் செம்பட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு, பலத்த சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. அழகர்நாயக்கன்பட்டியில் பலத்த காற்றுக்கு தெருக்களில் இருந்த 10க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் சாய்ந்ததில், வீடுகள் சேதமடைந்தன. மின் கம்பங்கள் சேதமடைந்ததால் இரவு முழுவதும் மின்சாரம் இல்லாமல் கிராமமக்கள் அவதி அடைந்தனர். ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அருகில் இரவு நேரத்தில் மின்கம்பம் விழுந்ததால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்றும் பிற்பகல் முதல் தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு சில இடங்களில் சாரல் மழை பெய்தது. நேற்று காலை வரை அதிகபட்சமாக பெருஞ்சாணியில் 83 மி.மீ மழை பெய்தது. தொடர்ந்து பெய்து வந்த மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 30.2 அடியாக உயர்ந்துள்ளது.

நெல்லை மாவட்டம், களக்காடு பகுதியில் கடந்த 2 நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவிலும் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது. இதனைத் தொடர்ந்து சுற்றுச்சூழல் சுற்றுலாமையமான களக்காடு தலையணையில் நேற்று அதிகாலை நீர்வரத்து அதிகரித்தது. தடுப்பணையை மூழ்கடித்தபடி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதையடுத்து தலையணையில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்தனர்.

# தமிழ்நாட்டை போல பிற மாநிலங்களிலும் மோடி அரசுக்கு எதிராக கூட்டணி அமைத்து போராட்டம்: மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி பேட்டி



மதுரை, ஏப்.9

தமிழ்நாட்டைப்போல பிற மாநிலங்களில் கூட்டணி அமைத்து மோடி அரசுக்கு எதிராக போராட வேண்டும் என சிபிஎம் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி கூறியுள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள எம்.ஏ.பேபி, மதுரை தெப்பக்குளம் பகுதியிலுள்ள கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ராமமூர்த்தி மற்றும் மகபூப்பாளையத்தில் உள்ள தூக்கு மேடை பாலு ஆகியோர் சிலைகளுக்கு நேற்று மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: மோடி அரசை எதிர்த்து போராடுவதற்காக மாநாட்டின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் கேரளாவில் எம்புரான் திரைப்பட தயாரிப்பாளருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியுள்ளது. இப்படத்தில் 2002ல் நடந்த குஜராத் கலவரம் குறித்து காட்சிகள் இடம் பெற்றுள்ளது. அதில் நடித்த நடிகர்கள் மோடி அரசால் மிரட்டப்பட்டு வருகிறார்கள். இது மோடி அரசின் பாசிச எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இதை எதிர்த்து போராட கட்சியினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை திமுக தலைமையில் மதசார்பற்ற கூட்டணி அமைத்து, மக்களுக்காக போராடி வருகிறோம். இக்கூட்டணி தமிழ்நாட்டில் நாடாளுமன்ற தேர்தலில் பாஜவை தோற்கடித்துள்ளது. தமிழ்நாட்டில் கூட்டணி அமைத்தது போல இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களில் மோடி அரசுக்கு எதிராக கூட்டணி அமைத்து போராட வேண்டும். கட்சியின் மத்தியக் குழுவில் 20 சதவீதம் பெண் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மே 20ல் தொழிற்சங்கங்கள் சார்பில் நடைபெறும் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

# நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டின் மீது ராம்குமார் தனக்கு எந்த உரிமையும் இல்லை என பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்: சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை, ஏப்.9

நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டின் மீது தனக்கு எந்த உரிமையும், பங்கும் இல்லை என்று பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு ராம்குமாருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் சிவாஜி கணேசனின் பேரனும், நடிகருமான துஷ்யந்த், அவரது மனைவி அபிராமி ஆகியோர் பங்குதாரர்களாக உள்ள ஈசன் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் நடிகர் விஷ்ணுவிஷால், நடிகை நிவேதா பெத்துராஜ் உள்ளிட்டோர் நடிப்பில் ஜகஜால கில்லாடி என்ற படத்தை தயாரித்தனர். பட தயாரிப்புக்காக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் 3 கோடியே 74 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தனர். இந்த கடனை திருப்பி செலுத்தாததால், வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 39 லட்சம் ரூபாயை செலுத்துவதற்காக ஜகஜால கில்லாடி படத்தின் அனைத்து உரிமைகளையும், தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவன நிர்வாக இயக்குனரிடம் ஒப்படைக்கும்படி மத்தியஸ்தர் கடந்த 2024ம் ஆண்டு மே 4ம் தேதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவின்படி படத்தின் அனைத்து உரிமைகளையும் வழங்காததையடுத்து மத்தியஸ்தர் தீர்ப்பை அமல்படுத்தும் வகையில், ராம்குமாரின் தந்தையான சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்து பொது ஏலம் விட உத்தரவிடக் கோரி தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய உத்தரவிட்டது.

இந் நிலையில், அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்ய பிறப்பித்த உத்தரவை நீக்கக் கோரி, நடிகர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இந்த மனு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, ராம்குமார் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், அன்னை இல்லத்தின் மீது ராம்குமாருக்கு எந்த உரிமையும், பங்கும் இல்லை எனக்கூறினார்.

இதனையடுத்து, அன்னை இல்லத்தின் மீது தனக்கு தற்போது, எந்த உரிமையும், எந்த பங்கும் இல்லை எனவும் எதிர்காலத்திலும் அவ்வாறு எந்த உரிமையும் கோரமாட்டேன் எனவும் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு ராம்குமாருக்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை தள்ளிவைத்தார். வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது.

# போக்குவரத்து நெரிசலில் நின்றபோது ஏடிஜிபி சங்கர் வாகனம் விபத்தில் சிக்கி அப்பளம்போல் நொறுங்கியது: அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்



சென்னை, ஏப்.9

பொன்னேரி அடுத்த பெருஞ்சேரியில் சுமார் ஒரு லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வரும் 19ம்தேதி நடக்கிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் விழாவிற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. விழா ஏற்பாடுகளை தொடர்ச்சியாக ஆவடி மாநகர காவல் ஆணையர் சங்கர் நேரில் ஆய்வு செய்து வருகிறார். அதன்படி, நேற்று முன்தினம் நிகழ்ச்சி ஏற்பாடுகளையும், முதல்வர் ரோடு ஷோ நடத்த உள்ள பாதையையும் ஆய்வு செய்தார்.

இந்நிலையில், 2வது நாளாக பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆவடி மாநகர காவல் ஆணையர் சங்கர் நேற்று காலை ஆய்வு செய்தார். முதல்வர் நிகழ்ச்சிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்த பின்,

சோழவரம் வழியே ஆவடியில் உள்ள அலுவலகத்திற்கு காவல் ஆணையர் சங்கர் வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். சோழவரம் அடுத்த செம்புலிவரம் ஜிஎன்டி சாலை பகுதியில் நேற்று காலை 11.30 மணிக்கு போக்குவரத்து நெரிசல் காரணமாக ஆவடி மாநகர காவல் ஆணையர் வாகனம் நின்று கொண்டிருந்தது.

அப்போது, பின்னால் அதிவேகமாக வந்த லாரி ஒன்று டயர் வெடித்து கட்டுப்பாட்டை இழந்து ஆணையரின் வாகனத்திற்கு பின்னால் நின்றிருந்த சரக்கு வாகனத்தின் மீது மோதியதில், அடுத்தடுத்த வாகனங்கள் காவல் ஆணையரின் வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காவல் ஆணையரின் கார் அப்பளம் போல நொறுங்கியது. விபத்தில் அதிர்ஷ்டவசமாக காவல் ஆணையர் சங்கர் உயிர் தப்பிய நிலையில் அவரது பாதுகாவலர் மாரி செல்வம் (30) காயம் அடைந்தார். தொடர்ந்து, போக்குவரத்து காவலர்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி விபத்தில் காயமடைந்த காவலரை மீட்டு சிகிச்சைக்காக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பினர்.

# மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பித்தால் செயற்கை கை, கால் உறுப்புகள் உடனுக்குடன் வழங்கப்படுகிறது: அமைச்சர் கீதாஜீவன் தகவல்



சென்னை. ஏப்.9

மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பம் செய்தால் செயற்கை கை, கால் உடனுக்குடன் வழங்கப்படுவதாக அமைச்சர் கீதாஜீவன் கூறினார். பேரவையில் நேற்று சேலம் மேற்கு அருள் (பாமக), மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் செயற்கை கை, கால் வழங்குவதை விரைவுபடுத்த வேண்டும் என்றார்.

இதற்கு சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் பதில் அளித்து பேசியதாவது: முதல்வரின் விரிவான காப்பீட்டு திட்டத்தில் நவீன செயற்கை உறுப்புகள் வேண்டி விண்ணப்பிக்கும் பயனாளிகளின் விண்ணப்பங்களுக்கு உடனுக்குடன் ஒப்புதல் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட துறையால் தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலமும் செயற்கை கை, கால் மற்றும் உறுப்புகள் வழங்கப்படுகிறது.

2022. 23 முதல் 2024. 25 நிதியாண்டு வரை 3,969 நவீன செயற்கை உறுப்புகள் 33 கோடியே 74 லட்சத்து 22 ஆயிரத்து 945 மதிப்பில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயற்கை உறுப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்

# மகாராஷ்டிர துணை முதல்வரை விமர்சித்த வழக்கு; நகைச்சுவை நடிகர் குணால் கம்ரா முன்ஜாமீன் 17ம் தேதி வரை நீட்டிப்பு: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஏப்.9

மும்பையில் நகைச்சுவை நடிகர் குணால் கம்ரா சமீபத்தில் தனது யூடியூப் சேனலில் ஒரு வீடியோவை வெளியிட்டார். அதில், சிவசேனாவை உடைத்து, பாஜ கூட்டணியில் இணைந்து ஏக்நாத் ஷிண்டே முதல்வரானதை விமர்சித்திருந்தார்.

இதையடுத்து, குணால் கம்ரா மீது மும்பை கார் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் தனக்கு டிரான் சிட் முன்ஜாமீன் (வேறு மாநிலத்தில் பதியப்பட்ட வழக்கில் முன்ஜாமீன் கேட்டு தாக்கல் செய்யப்படும் மனு) கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் குணால் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், தான் விழுப்புரத்தில் வசித்து வருவதாகவும், மும்பை சென்றால் தன்னை போலீசார் கைது செய்வார்கள் என்பதால் முன்ஜாமீன் வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சுந்தர்மோகன், குணால் கம்ராவுக்கு இடைக்கால முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, குணால் கம்ரா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் வி.சுரேஷ், மனுதாரர் மீது மேலும், மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்ராவின் வீட்டுக்கு சென்ற அவரது வயதான பெற்றோரை போலீசார் துன்புறுத்தி உள்ளனர். கம்ராவின் நகைச்சுவை நிகழ்ச்சிக்கு சென்றவர்களின் விவரங்களையும் போலீசார் சேகரித்து வருகிறார்கள் என்றார்.

இதையடுத்து, குணால் கம்ராவுக்கு வழங்கப்பட்ட இடைக்கால முன்ஜாமீனை வரும் 17ம் தேதி வரை நீட்டித்த நீதிபதி, இடைப்பட்ட காலத்தில் மும்பை உயர் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு குணால் கம்ராவை அறிவுறுத்தி விசாரணையை தள்ளிவைத்தார்.

# சென்னை பல்கலை சேப்பாக்கம் வளாகத்தில் தோழி விடுதி கட்டும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.9

சென்னை பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் தோழி விடுதி கட்டும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை:

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் ராமானுஜம் கணித ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்புறத்தில் மாணவிகள் விடுதி அமைந்துள்ள இடத்தில், பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதி கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. மாணவியரின் உயர் கல்வி வாய்ப்பை பறிக்கும் வகையில் செயல்படுத்தப்படவிருக்கும் இந்தத் திட்டம் கண்டிப்பாக கைவிட வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் மாணவியர் விடுதி கட்டப்படும் என்ற அறிவிப்பு வெளியாகும் என அனைவரும் எதிர்பார்த்திருந்த நிலையில், அதற்கு பதிலாக சமூகநலத்துறையின் சார்பில் தோழி விடுதி கட்டப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்திருப்பது மாணவியரிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தோழி விடுதிகளை கட்ட சென்னையில் ஏராளமான இடங்கள் இருக்கும் நிலையில், அவற்றை விடுத்து பல்கலைக்கழக மாணவிகள் தங்குமிடத்தை பறிப்பது நியாயமல்ல.

எனவே, சென்னை பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் தோழி விடுதி கட்டும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும்.

# வயல்வெளியில் அமைக்கப்பட்ட கம்பிவேலியில் மின்சாரம் பாய்ந்து 2 குழந்தை, பாட்டி பலி



நாமக்கல், ஏப்.9

நாமக்கல் மாவட்டம், மோகனூர் அருகே ஆண்டாபுரத்தை சேர்ந்தவர் செல்வம் (60). இவரது மனைவி இளஞ்சியம் (50). இவர்களின் மகன் அருள் (35). இவருக்கு சுஜித் (5) என்ற மகன், ஐவிழி (3) என்ற மகள் இருந்தனர். செல்வம், அதே பகுதியை சேர்ந்த மணி என்பவருக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, அதில் பருத்தி மற்றும் சோளம் சாகுபடி செய்துள்ளார். நேற்று காலை, செல்வம் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு சென்று விட்டார்

மதியம் 2 மணியளவில், இளஞ்சியம் பேரன், பேத்தியுடன் கணவருக்கு சாப்பாடு கொண்டு சென்றார். அங்கு வயலையொட்டி ஒரு மின்கம்பமும், அதன் அருகே இரும்பு கம்பி வேலியும் உள்ளன. இந்த மின்கம்பத்தில் இருந்து சர்வீஸ் வயர் மூலம் மின்கசிவு ஏற்பட்டு, இரும்பு கம்பி வேலியில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. இதை அறியாமல், வரப்பு மீது நடந்து சென்ற குழந்தைகள் சுஜித், ஐவிழி ஆகிய இருவரும், அந்த இரும்பு கம்பி வேலியை பிடித்துள்ளனர்.

அப்போது, அவர்களின் உடலில் மின்சாரம் பாய்ந்ததில் 2 குழந்தைகளும் அலறி துடித்தனர். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த இளஞ்சியம், ஓடிச்சென்று குழந்தைகளை காப்பாற்ற முயன்றார். அப்போது, அவரது உடலிலும் மின்சாரம் பாய்ந்ததில் 3 பேரும் தூக்கி வீசப்பட்டு, உடல் கருகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதை பார்த்த செல்வம் கண்ணீர் விட்டு கதறி அழுதார். இதுகுறித்து மோகனூர் போலீசார் வழக்குபதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தொண்டையில் இறைச்சி சிக்கி மாணவி பலி



பவானி, ஏப்.9

ஈரோடு மாவட்டம், பவானி கீரைக்கார வீதியைச் சேர்ந்தவர் முனிராஜ். இவரது மகள் வர்ஷினி (13). இவர், அப்பகுதியில் உள்ள நகராட்சி பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார். பவானியை அடுத்த காலிங்கராயன்பாளையம், மணக்காட்டூரில் உள்ளஉறவினர்வீட்டுக்கு நேற்று முன்தினம் குடும்பத்துடன் முனிராஜ் சென்றுள்ளார். அங்கு, ஆட்டு இறைச்சி சமைத்து சாப்பிட்டபோது, வர்ஷினியின் தொண்டையில் இறைச்சி துண்டு எதிர்பாராமல் சிக்கிக் கொண்டது. தண்ணீர் குடித்தும் சரியாகவில்லை. தொடர்ந்து, மூச்சு விட முடியாமல் சிரமப்பட்ட மாணவி வர்ஷினியை பெற்றோர் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர், பவானி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் வர்ஷினி உயிரிழந்தார்.

# கோர்ட், சிறை பகுதியில் தாழ்வாக பறந்த ஹெலிகாப்டரால் பரபரப்பு



கோபி, ஏப்.9

ஈரோடு மாவட்டம் கோபி கச்சேரிமேடு பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், சார் ஆட்சியர் அலுவலகம், டி.எஸ்.பி.அலுவலகம்,மாவட்ட சிறை, காவல் நிலையம் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்கள், தாலுகா தலைமை மருத்துவமனை, தாலுகா அலுவலகம், நகராட்சி அலுவலகம் என கோபியின் முக்கிய அலுவலகங்கள் உள்ளன. இது தவிர, முக்கிய வணிக பகுதியாகவும் கச்சேரிமேடு இருப்பதால், இங்கு காலை முதல் இரவு வரை பொதுமக்கள் நடமாட்டம் அதிகளவில் இருக்கும்.

இந்நிலையில், நேற்று காலை கருப்பு மற்றும் சிவப்பு நிறத்துடன் கூடிய ஹெலிகாப்டர் ஒன்று கச்சேரிமேட்டில் உள்ள முக்கிய அரசு அலுவலகங்கள் அடங்கிய பகுதியில் மிகவும் தாழ்வாக பறந்து தொடர்ந்து வட்டமிட்டது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில், ஒடிசா மாநில ஒப்பந்ததாரர் ஒருவர், கோபியில் உள்ள உறவினர் வீட்டிற்கு சொந்த ஹெலிகாப்டரில் வந்ததும், அது கோபியை வட்டமிட்டு பறந்ததும் தெரியவந்தது.

# ஆம்னி பஸ்சில் திடீர் தீ: 35 பயணிகள் தப்பினர்

திருமங்கலம். ஏப்.9

பெங்களூருவிலிருந்து நெல்லைக்கு நேற்று முன்தினம் இரவு ஆம்னி பஸ் புறப்பட்டது. பஸ்சை நெல்லையை சேர்ந்த டிரைவர் சுப்புராஜ்(35) ஓட்டிச் சென்றார். கண்டக்டராக மனோஜ்(25) பணியில் இருந்தார். மொத்தம் 45 பயணிகளுடன் புறப்பட்ட அந்த பஸ்சில், மதுரையில் 10 பயணிகள் இறங்கியதால் 35 பேருடன் நெல்லை நோக்கி சென்று கொண்டிருந்தது.

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி அருகே நல்லமநாயக்கன்பட்டி விலக்கு என்ற இடத்தில் மதுரை – கன்னியாகுமரி நான்கு வழிச்சாலையில் சென்றபோது பஸ்சின் முன்புற சக்கரத்தின் அடிப்பகுதியில் தீப்பிடித்தது. இதன் எதிரொலியாக பஸ்சிற்குள் புகை வந்ததை கவனித்த டிரைவர், பஸ்சை உடனடியாக நிறுத்த முயன்றார். அப்போது கட்டுப்பாட்டினை இழந்த பஸ் சாலையோர பள்ளத்தில் இறங்கி நின்றது. பயணிகள் அலறியடித்து இறங்கி ஓடினர். சக்கரத்தின் அருகே பற்றிய தீ பஸ்சின் முன்பகுதி முழுவதும் மளமளவென பரவத்தொடங்கியது. தகவலறிந்து கள்ளிக்குடி தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர். பயணிகள் விரைவாக வெளியேறியதால் யாருக்கும் காயங்கள் இல்லை. பின்னர் அவர்களுக்கு மாற்று பஸ் ஏற்பாடு செய்யப்பட்டு நெல்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# 2 சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை; மத போதகர் மீது போக்சோ வழக்கு

கோவை, ஏப்.9

கோவை ஜிஎன் மில்ஸ் பகுதியை சேர்ந்தவர் ஜான்ஜெபராஜ் (37). காந்திபுரத்தில் உள்ள ஒரு சர்ச்சில் மதபோதகராக இருந்து வருகிறார். கடந்த 11 மாதங்களுக்கு முன்பு அவர் தன் வீட்டில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியுள்ளார். அந்த நிகழ்ச்சிக்கு காந்திபுரத்தில் வசித்து வரும் அவரது மாமனார் தனது 17 வயது வளர்ப்பு மகளை அழைத்து சென்றிருந்தார். அப்போது, ஜான் ஜெபராஜ் மாமனாரின் வளர்ப்பு மகளையும், தனது வீட்டின் அருகே வசித்து வரும் 14 வயது சிறுமியையும் தனி அறைக்கு சென்று பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது குறித்து வேறு யாரிடமும் கூறக்கூடாது என மிரட்டியதாகவும் தெரிகிறது.

சில நாட்களுக்கு முன்பு ஜான்ஜெபராஜ் வீட்டிற்கு மாமனார் கிளம்பியபோது வளர்ப்பு மகள் உடன் வர தயங்கியுள்ளார். விசாரித்தபோது, கடந்த 11 மாதங்களுக்கு முன்பு தனக்கும், 14 வயது சிறுமிக்கும் ஜான் ஜெபராஜ் பாலியல் தொல்லை கொடுத்தது குறித்து கூறியுள்ளார். இது தொடர்பாக காந்திபுரம் அனைத்து மகளிர் போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் ஜான் ஜெபராஜ் மீது போக்சோ வழக்கு பதியப்பட்டது. இதையடுத்து தலைமறைவான பாதிரியாரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# திருவண்ணாமலை கோயில் உண்டியல் காணிக்கை 3.79 கோடி



திருவண்ணாமலை, ஏப்.9

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில், பங்குனி மாத உண்டியல் காணிக்கை எண்ணும் பணி, நேற்று காலை 8 மணிக்கு தொடங்கி, இரவு 7 மணிவரை நடந்தது. உண்டியலில் ₹3 கோடியே 79லட்சத்து 20 ஆயிரத்து 354யை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியிருந்தனர்.

மேலும், 225 கிராம் தங்கம், 1765 கிராம் வெள்ளி ஆகியவற்றையும் பக்தர்கள் செலுத்தியிருந்தனர். வெளிநாட்டு கரன்சிகளும் இருந்தது. பின்னர், உண்டியல் காணிக்கை எண்ணிக்கை முடிந்ததும், அந்த தொகை உடனடியாக அண்ணாமலையார் கோயில் கணக்கில் வங்கியில் செலுத்தப்பட்டது. அண்ணாமலையார் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், உண்டியல் காணிக்கையும் வெகுவாக அதிகரித்து வருகிறது. அதன்படி, பங்குனி மாத உண்டியல் காணிக்கை ₹3.79 கோடியை கடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# விசாரணை இறுதி கட்டத்தில் இருந்த நிலையில் வேறு நீதிமன்றத்திற்கு விசாரணையை மாற்ற முடியுமா..? அமைச்சர் பொன்முடி வழக்கில் நீதிபதி சரமாரி கேள்வி



சென்னை, ஏப்.9

கடந்த 1996-2001ம் ஆண்டுகளில் போக்குவரத்து துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில் ஒரு கோடியே 36 லட்சம் ரூபாய் அளவுக்கு சொத்து குவித்ததாக, 2002 அதிமுக ஆட்சியில் அமைச்சர் பொன்முடிக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு விழுப்புரம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு பின்னர் வேலூர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சியை விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்திருந்தார். வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அமைச்சர் பொன்முடி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, வழக்கை வேலூர் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் எந்த கோரிக்கையும் வைக்கப்படாத நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்களின் விளக்கத்தை கேட்காமல் வழக்கு மாற்றப்பட்டது. ஏற்கனவே 70 சதவீதம் விசாரணை முடிக்கப்பட்ட வழக்கில் மீதி விசாரணையை மேற்கொண்டதாகவும், 5 நாட்களில் தீர்ப்பளிக்கப்படவில்லை எனவும் வேலூர் நீதிமன்ற நீதிபதி மனு தாக்கல் செய்துள்ளார் என்று வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, ஒரு மாவட்டத்தில் உள்ள வழக்கை அந்த மாவட்டத்தின் நிர்வாக நீதிபதிகள், வேறு மாவட்டத்திற்கு மாற்ற முடியுமா? அனைத்து நீதிபதிகள் அடங்கிய குழு முன் வைக்காமல், தலைமை நீதிபதி, வழக்கை வேறு மாவட்டத்திற்கு மாற்ற ஒப்புதல் வழங்க முடியுமா என்பது குறித்து அட்வகேட் ஜெனரல் மற்றும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் விளக்கம் தரவேண்டும். வழக்கை வேறு மாவட்டத்திற்கு மாற்ற முடியும் என்றால் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த இந்த வழக்கில் மேற்கொண்டு எந்த விசாரணையும் நடத்த முடியாது. ஐந்து நாட்களில் தீர்ப்பளித்தார் என்பதற்காக அந்த தீர்ப்பை ரத்து செய்ய முடியாது என்று கூறி விசாரணையை வரும் 17ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

# சென்னையில் இருந்து இலங்கைக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானத்தில் திடீர் இயந்திர கோளாறு: ஓடுபாதையில் நிறுத்தப்பட்டதால் பரபரப்பு



சென்னை, ஏப்.9

சென்னையில் இருந்து இலங்கைக்கு புறப்பட்ட ஏர் இந்தியா பயணிகள் விமானம் திடீரென்று இயந்திர கோளாறு காரணமாக ஓடுபாதையில் அவசர அவசரமாக நிறுத்தப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று காலை 5.45 மணியளவில் இலங்கையின் தலைநகர் கொழும்புக்கு, ஏர் இந்தியா பயணிகள் விமானம் புறப்பட இருந்தது. இந்த விமானத்தில் 148 பயணிகள், 6 விமான ஊழியர்கள் என மொத்தம் 154 பேர் இருந்தனர். இந்த விமானம் அதிகாலை 5:45 மணிக்கு புறப்பட வேண்டியது சுமார் 15 நிமிடங்கள் தாமதமாக, காலை 6 மணியளவில் சென்னையில் இருந்து புறப்பட்டு, ஓடுபாதையில் ஓடத் தொடங்கியது. அப்போது விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டுள்ளதை விமானி கண்டுபிடித்தார்.

இந்த நிலையில் விமானத்தை, வானில் பறக்கச் செய்தால் பெரும் ஆபத்து என்பது உணர்ந்த விமானி, உடனடியாக ஓடுபாதையில் அவசரமாக விமானத்தை நிறுத்திவிட்டு, சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக விமான பொறியாளர்கள் குழுவினர், விமானத்துக்குள் ஏறி, பழுதடைந்த இயந்திரங்களை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். பின்னர், இயந்திரக் கோளாறு சீர் செய்யப்பட்டு சுமார் 2 மணி நேரம் தாமதமாக, 7.40 மணியளவில் சென்னையில் இருந்து இலங்கை தலைநகர் கொழும்புக்கு புறப்பட்டு சென்றது. விமானத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறை விமானி, சரியான நேரத்தில் கண்டுபிடித்ததால் அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டது.

# கனிம வளங்கள் கொண்ட நிலங்கள் மீதான அதிகபட்ச வரியாக டன் ஒன்றிற்கு ரூ.7000 நிர்ணயம்: சுரங்கத்துறை ஆணையர் அறிவிப்பு



சென்னை, ஏப்.9

புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

'தமிழ்நாடு கனிம வளங்கள் கொண்ட நிலங்கள் மீதான வரி விதிகள், 2025' என்கிற புதிய விதி தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டுள்ளது. இந்த விதிகள் அரசிதழில் 4.4.2025ல் வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி 32 கனிமங்களுக்கு வரி விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெருங்கனிம குத்தகைதாரர்களால் சுரங்கம் செய்து எடுத்து செல்லும் பெருங்கனிமங்களுக்கு ராயல்டி, மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி, தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை நிதி மற்றும் வருமான வரி செலுத்தப்படுகிறன்றன. சிறுகனிமகுத்தகைதாரர்களால் குவாரி செய்து எடுத்துச் செல்லப்படும் சிறுகனிமங்களுக்கு உரிம தொகை, மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி, பசுமை விதி மற்றும் வருமான வரி செலுத்தப்படுகின்றன.

குத்தகைதாரர்களால் செலுத்தப்படும் மேற்கண்ட இனங்கள் தவிர தற்போது 4.4.2025 முதல் கனிம வளங்கள் கொண்ட நிலங்கள் மீதான வரி கூடுதலாக செலுத்த வேண்டும். இந்த சட்டத்தில் கனிம வளங்கள் கொண்ட நிலங்கள் மீதான அதிக பட்ச வரியாக சிலிமனைட் கனிமத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ.7000 மற்றும் குறைந்தபட்ச வரியாக களிமண் கனிமத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ.40 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த கனிம வளங்கள் கொண்ட நிலங்கள் மீதான வரிச் சட்டத்தின்படி தமிழ்நாடு அரசுக்கு கூடுதலாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.2400 கோடி வருவாய் கிடைக்கும்.

# கேரள மாநிலத்தில் இருந்து பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு மாம்பழம் வரத்து துவங்கியது



பொள்ளாச்சி, ஏப்.9

பொள்ளாச்சியில் பெரிய மார்க்கெட்டாக கருதப்படும் காந்தி மார்க்கெட்டுக்கு, ஒவ்வொரு ஆண்டும் மாம்பழம், தர்பூசணி, பலாபழம், அன்னாசிபழம் மற்றும் கரும்பு உள்ளிட்டவை சீசனை பொறுத்து விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் துவக்கத்தில் இருந்து தர்பூசணி வரத்து அதிகமாக காணப்பட்டது. தற்போதும் வெளிமாவட்டங்களில் இருந்து லாரி மற்றும் டெம்போக்களில் கொண்டுவரப்படும் தர்பூசணிகளை, வெளியூர் வியாபாரிகள் மொத்த விலைக்கு வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், தற்போது மார்க்கெட்டுக்கு மாம்பழம் வரத்து துவங்கியுள்ளது.

இந்த சீசன் தொடர்ந்து ஜூன் மாதம் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியிருந்து மாம்பழம் வரத்து குறைவாக இருந்தாலும், கேரள மாநிலத்தில் இருந்து மாம்பழங்கள் அதிகளவில் கொண்டுவரப்படுகிறது. இதில், கேரளாவில் இருந்து செந்தூரம், அல்போன்சா, பங்கனபள்ளி, மல்கோவா, குந்தா, இமாம்பசந்த், மல்லிகா உள்ளிட்ட வகையான மாம்பழங்களின் வரத்து அதிகமாக உள்ளது. கடந்த சில நாட்களாக மார்க்கெட்டுக்கு டன் கணக்கில் மாம்பழங்கள் முதற்கட்ட மாங்காயாக வரபெற்றுள்ளது.

இதனை மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.

அதிலும், திருப்பூர் மற்றும் ஈரோடு, கோவை பகுதி வியாபாரிகள் நேரடியாக வந்து வாங்கி செல்கின்றனர். தமிழ் புத்தாண்டு (14ம் தேதி) நெருங்குவதால், மாம்பழங்களின் வரத்து மேலும் அதிகரிக்கும் எனவும், கூடுதல் விலைக்கு விற்பனையாகும் என மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

# ஜேஇஇ முதன்மை தேர்வு: 5 நிமிடம் தாமதமாக வந்த 50 பேருக்கு அனுமதி மறுப்பு



இளம்பிள்ளை, ஏப்.9

சேலம் மாவட்டம் காகாபாளையம் அருகே உள்ள தனியார் கல்லூரியில் ஜேஇஇ முதன்மை தேர்வு இன்று நடந்தது. இந்த தேர்வு காலை 8.30 மணியளவில் துவங்கியது. மையத்திற்கு 5 நிமிடம் தாமதமாக வந்த 50 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் தேர்வு எழுத முடியாமல் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதுகுறித்து மாணவர்களின் பெற்றோர்கள் கூறுகையில், எங்கள் குழந்தைகள் தேர்வு எழுத பல்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்து வந்தோம். வரும் வழியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இருப்பினும் அவசர அவசரமாக விரைந்து வந்தும் அவர்கள் தேர்வு எழுத முடியவில்லை. சரியான நேரத்தில் கல்லூரி கேட்டின் உள்ளே நுழைந்தும், அங்கிருந்து தேர்வு மையம் செல்ல 5 நிமிடம் தாமதம் ஆகியதால் தேர்வு மைய பார்வையாளர் மாணவர்களை தேர்வு எழுத அனுமதிக்காதது வேதனை அளிக்கிறது. வரும் காலக்கட்டத்தில் அந்தந்த மாவட்டத்திலேயே மாணவ, மாணவிகள் தேர்வு எழுத அனுமதி வழங்க வேண்டும் என்றனர்.

# வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா, அவர்களது வயிறு எரிய வேண்டுமா?: முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவு



சென்னை, ஏப்.9

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் தள பதிவு:

நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா? உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதும் என்பது சாடிஸ்ட் பாஜ அரசுக்கு மிகவும் பொருந்தும்.

உலக அளவில் கச்சா எண்ணெய் விலை சரிந்துள்ள நிலையில் பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்காவிட்டாலும் பரவாயில்லை, விலையை ஏற்றாதீர்கள் எனக் கெஞ்சும் பரிதாப நிலைக்கு நாட்டு மக்களைத் தள்ளிவிட்டார்களே. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், சமையல் காஸ் சிலிண்டர் விலை உயர்வு அமைந்திருக்கிறது. அடாவடியாக விலையை உயர்த்திவிட்டு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் அதில் சிறு பகுதியைக் குறைத்து நாடகம் ஆடுவது பாஜவின் வழக்கமாகிவிட்டது.

இந்த நாடகத்தைப் பார்த்துப் பார்த்து நமக்கும் பழக்கமாகிவிட்டது. ஒன்றிய பாஜ அரசே தேர்தல் ஏதாவது வரும் வரை காத்திராமல், இந்த விலை உயர்வை உடனே திரும்பப்பெறுக. இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

9.4.2025

## குடியாத்தம் சிரசு திருவிழா முன்னிட்டு கெங்கையம்மன் கோயிலில் பால் கம்பம் நடப்பட்டது

குடியாத்தம், ஏப்.9

வேலூர் மாவட்டம் குடியாத்தம் கெங்கையம்மன் கோயிலில் சிரசு திருவிழாவை முன்னிட்டு இன்று பால் கம்பம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டத்தில் மிகவும் பிரசித்திபெற்ற திருவிழாக்களில் குடியாத்தம் கெங்கையம்மன் சிரசுதிருவிழாவும்ஒன்று. இக்கோயிலில் ஆண்டுதோறும் சிரசு திருவிழா வைகாசி மாதம் 1ம் தேதி நடைபெறும். இந்த திருவிழாவில் வேலூர் மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களி'ல் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்வார்கள். அதன்படி இந்தாண்டு கெங்கையம்மன் சிரசு திருவிழா வரும் மே மாதம் 15ம் தேதி(வைகாசி 1ம் தேதி) நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு பால் கம்பம் நடும் நிகழ்ச்சி கெங்கையம்மன் கோயிலில் இன்று நடந்தது.

இதையொட்டி அதிகாலை நடை திறக்கப்பட்டு அம்மனுக்கு பால், தயிர், மஞ்சள், சந்தனம், குங்குமம், இளநீர், பன்னீர் உள்பட பல்வேறு வாசனை திரவியங்கள் மூலம் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் அம்மனுக்கு சந்தனகாப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. இதைதொடர்ந்து பால் கம்பத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. பின்னர் பால்கம்பம் கோயிலை சுற்றி ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கோயில் வளாகத்தில் நடப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பால்கம்பம் நடப்பட்டதை தொடர்ந்து சிரசு திருவிழாவிற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கி நடைபெறும். இதன் தொடர்ச்சியாக வரும் 30ம் தேதி காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மே மாதம் 14ம் தேதி தேர் திருவிழாவும், 15ம் தேதி கெங்கையம்மன் சிரசு திருவிழாவும், 16ம் தேதி புஷ்ப பல்லக்கும் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் பாலசுப்பிரமணி, ஆய்வாளர் பாரி, செயல் அலுவலர் சிவக்குமார், நிர்வாகிகள் சம்பத் , பிச்சாண்டி, முன்னாள் அறங்காவலர்கள், திருப்பணி குழுவினர், மற்றும்விழாக்குழுவினர் செய்திருந்தனர்.

## பண்ணாரி அம்மன் கோயில் குண்டம் திருவிழா: தீ மிதிக்க குவிந்த பக்தர்கள்

சத்தியமங்கலம், ஏப்.9

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம்அடுத்துள்ள பிரசித்தி பெற்ற பண்ணாரி மாரியம்மன் கோயிலில் குண்டம் திருவிழா கடந்த மார்ச் 24ம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் பண்ணாரி அம்மன் திருவீதி உலா சுற்றுவட்டார கிராமங்களில் நடைபெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கம்பம் சாட்டுதல் நிகழ்ச்சி நடந்தது. இதையடுத்து தினமும் இரவில் அம்மன் புகழ் பாடும் பாடல்களை பாடியபடி மலைவாழ் மக்களின் பீனாச்சி வாத்திய இசை முழங்க கம்ப நடனம் ஆடும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே பக்தர்கள் குண்டம் இறங்க ஏதுவாக 10 ஷெட்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு ஷெட்டிலும் 800 பேர் காத்திருக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் காத்திருக்கும் பக்தர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்க உபயதாரர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



ஒவ்வொரு செட்டிலும் தங்கி உள்ள பக்தர்களுக்கு ஒவ்வொரு கலரில் கையில் கலர் பட்டை அணிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பக்தர்கள் திருவிழாவிற்கு வந்து செல்ல ஏதுவாக நாளை இரவு வரை அரசு போக்குவரத்து கழகம் சார்பில், ஈரோடு, திருப்பூர், கோவை, நீலகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கர்நாடக மாநிலத்தில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. பாதுகாப்பு பணிக்காக 2000 போலீசார் ஈடுபட உள்ளதாக, மாவட்ட காவல் துறை சார்பில், அறிவிக்கப்பட்டுள்ளது. கோயில் வளாகத்தில் பக்தர்கள் அலகு குத்தியும், தீச்சட்டி ஏந்தியும் நேர்த்திக்கடன் செலுத்தினர். இன்று திங்கட்கிழமை குண்டம் அமைப்பதற்காக எரிகரும்புகள் அடுக்கி வைத்து சிறப்பு பூஜைகள் செய்து நெருப்பிடுதல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. நாளை (செவ்வாய்) அதிகாலை 3.30 மணிக்கு குண்டம் இறங்குதல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அதிகாலை 4 மணி முதல் மாலை 4 மணி வரைதொடர்ந்து 12 மணி நேரம் லட்சக்கணக்கான பக்தர்கள் குண்டம் இறங்கி நேர்த்திக் கடன் செலுத்த உள்ளனர். சத்தியமங்கலத்தில் இருந்து பண்ணாரி செல்லும் பக்தர்கள் தங்கள் வாகனங்களை நிறுத்த புதுக்குய்யனூர் பிரிவிலும், பவானிசாகர் சாலையில் வரும் வாகனங்கள் நிறுத்த ராஜன் நகர் பகுதியிலும் பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரத்துறை சார்பில் பண்ணாரி அரசு தொடக்கப்பள்ளி வளாகத்தில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் வளாகத்தில் 260 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கோயில் வளாகத்தில் அமைந்துள்ள புறக்காவல் நிலையத்தில் கட்டுப்பாட்டு அறை அமைத்து கண்காணிப்படுகிறது. திருவிழாவை முன்னிட்டு பக்தி இன்னிசை நிகழ்ச்சிகள், பரத நாட்டியக் கச்சேரி, பட்டிமன்றம், ஆன்மீக சொற்பொழிவு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

## அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணை

திருப்பூர், ஏப்.9

அமராவதி பழைய ஆயக்கட்டில் உள்ள முதல் 2 அமராவதி பழைய வாய்க்கால்களான இராமகுளம் மற்றும் கல்லாபுரம் பழைய வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு நாளை முதல்அடுத்த மாதம் 20ம் தேதி வரையிலான காலத்தில் தகுந்த இடைவெளிவிட்டு (42 நாட்களில் 25 நாட்கள் தண்ணீர் திறப்பு, 17 நாட்கள் தண்ணீர் அடைப்பு என்ற அடிப்படையில்) அமராவதி அணையின் மண்ணணை மதகு வழியாக வினாடிக்கு 50 கன அடி வீதம் மொத்தம் 108.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல் அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 2834 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும்.

## நியோ மேக்ஸ் மோசடி.. நிலத்தை பிரித்துத் தர குழு அமைக்க ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஏப்.9

நியோமேக்ஸ் நிறுவன முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட ஜாமின், முன் ஜாமினை ரத்து செய்யக் கோரிய வழக்கு விசாரணையில், முதலீட்டாளர்களுக்கு நிலத்தை பிரித்துத் தர அதிகாரிகள் அடங்கிய குழு விரைவில் அமைக்கப்படும் என உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி தெரிவித்துள்ளார்.




மேலும், மாவட்ட வருவாய் அலுவலர், பதிவுத்துறை, நகர திட்டமிடல் இயக்குநரக அதிகாரி அடங்கிய குழு அமைக்கப்படும். மனுதாரர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பின் ஆலோசனைகளைபதில் மனுவாக தாக்கல் செய்ய நீதிபதி உத்தரவிட்டுள்ளார். முதலீட்டு பணம் விரைவில் திரும்ப கிடைக்கும் வகையில் அமைக்கப்படும் குழு செயல்படும் என ஐகோர்ட் மதுரை கிளை தெரிவித்துள்ளது.

## திட்டமிட்டபடி மே.9ல் பொதுத்தேர்வு முடிவு - அரசு

சென்னை, ஏப்.9

12ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் திட்டமிட்டப்படி மே 9ம் தேதி வெளியாகும் என பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது. 10, 11ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 19ம் தேதி வெளியிடப்படும்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேதிகளில் பொதுத்தேர்வு முடிவு வெளியாகும்எனபள்ளிக் கல்வித்துறை விளக்கம் அளித்துள்ளது.




## 'மிமிக்ரி' செய்து என் குரலை இழந்து வருகிறேன் நடிகர் மணிகண்டன்



'காலா', 'ஜெய்பீம்', 'சில்லு கருப்பட்டி', 'சில நேரங்களில் சில மனிதர்கள்' போன்ற படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து கவனம் ஈர்த்தவர், மணிகண்டன். 'குட்நைட்', 'லவ்வர்', 'குடும்பஸ்தன்' படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். புதியபடங்களிலும்நடித்துவருகிறார். நடிப்புதாண்டி, பலநடிகர்கள், பிரபலங்களின் குரலில் 'மிமிக்ரி' செய்து அசத்தியும் வருகிறார். இவரது 'மிமிக்ரி' கலைக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள்.

இதுகுறித்து மணிகண்டன் கூறும்போது, "அங்கீகாரம்தான் ஒவ்வொரு கலைஞனுக்கும் தேவை. அது கிடைக்காவிட்டால், எந்த கலைஞனும் முழுமை பெறமுடியாது. 'மிமிக்ரி' என்பது கடினமான விஷயம். அதன் மூலம் ரசிகர்களை மகிழ்வித்து வருவது பெருமை. பல நடிகர்களின் குரலை எடுத்து வருவதால், என் குரலே எனக்கு சில சமயங்களில் மறந்து போகிறது. மேடை நிகழ்ச்சிகளில் என் குரலில் பேசவே சிரமப்பட்டு போகிறேன். அந்தளவு என் குரலையே இழந்து வருகிறேன்.

இந்த இடத்துக்கெல்லாம் வருவேன் என்று எதிர்பார்த்தீர்களா? என்று என்னை கேட்கிறார்கள். ஆமாம், எதிர்பார்த்தேன்தான். எல்லாருக்கும் ஷாருக்கான் போல ஆகவேண்டும் என்று ஆசைதான். ஆனால் அவர் போல ஆவதற்கு என்ன செய்யவேண்டும்? என்பதில்தான் விஷயம் இருக்கிறது, என்று கூறினார்.

## வங்காளதேசத்திற்கு எதிரான டெஸ்ட் தொடர்; ஜிம்பாப்வே அணி அறிவிப்பு

ஜிம்பாப்வே கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 20ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடரின் ஆட்டங்கள் முறையே சில்ஹெட் மற்றும் சட்டோகிராமில் நடக்கிறது.

இந்நிலையில், இந்த டெஸ்ட் தொடருக்கான ஜிம்பாப்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு கிரேக் எர்வின் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியில் சீனியர் வீரரான சீன் வில்லியம்ஸ் இடம் பிடித்துள்ளார்.

ஜிம்பாப்வே அணி விவரம்:

கிரேக் எர்வின் (கேப்டன்), பிரைன் பென்னட், ஜோனதான் கேம்ப்பெல், பென் கர்ரன், டிரெவர் க்வாண்டு, வெஸ்லி மாதவரே, வெல்லிங்டன் மசகட்சா, வின்செண்ட் மசெகேசா, நியாஷா மாயவோ, பிளெஸ்சிங் முசரபானி, ரிச்சர்ட் ங்க்வாரா, விக்டர் நியாசி, தபத்ஸ்வா சிகா, நிக்கோலஸ் வெல்ச், சீன் வில்லியம்ஸ்.

போட்டி அட்டவணை விவரம்: முதல் டெஸ்ட் போட்டி: ஏப்ரல் 2024 சில்ஹெட் 2வது டெஸ்ட் போட்டி: ஏப்ரல் 28 மே 02 சட்டோகிராம

## மகிழ்ச்சியே, வாழ்க்கைக்கான சிறந்த மருந்து ரகுல் பிரீத் சிங்



தமிழில் 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தில் நாயகியாக நடித்து பிரபலமானவர் ரகுல் பிரீத் சிங். அதனைத்தொடர்ந்து அவர் 'தேவ்', 'என்.ஜி.கே.', 'அயலான்', ஆகிய படங்களில் நடித்துள்ளார். கமல்ஹாசனின் 'இந்தியன்2' படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்தி நடிகர் ஜாக்கி பக்னானியை காதலித்து திருமணம் செய்துகொண்ட ரகுல் பிரீத் சிங், திருமணத்துக்கு பிறகும் தொடர்ந்து படங்கள் நடித்து வருகிறார். இந்த நிலையில் உலக சுகாதார தினத்தையொட்டி, இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ஆரோக்கியமானமற்றும்கவனமுள்ளதேர்வுகள்மூலமாகஉங்களைநீங்களேஉற்சாகப்படுத்தி கொள்ளுங்கள். விருப்பமான புத்தகத்தை படியுங்கள். இயற்கையுடன் இணைந்திருந்தால் உங்களுக்கு அற்புதமான உணர்வு கிடைக்கும். பிடித்த விளையாட்டை விளையாடுங்கள்.

உங்களை அமைதிப்படுத்தவும், மன சமநிலையைக் கண்டறியவும் தியானத்தில் ஈடுபடுங்கள். ஒரு நாளைக்கு 5 நிமிடங்கள் மட்டுமே பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும். எனவே ஜாலியாக இருங்கள். சிரித்துக்கொண்டே இருங்கள். ஏனெனில் மகிழ்ச்சியே, ஆரோக்கியமான வாழ்க்கைக்கான சிறந்த மருந்து.

குழந்தைகளிடம் மனம் விட்டு பேசுங்கள். உங்கள் கனவுகளை அவர்களிடம் சொல்லுங்கள். உடல் என்ற விஷயத்தை மையப்படுத்தி இருக்கும் இந்த வாழ்க்கையை பாதுகாத்து வாழுங்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல். 2025: தொடர்ந்து சொதப்பும் ரோகித்.. 17 ரன்களில் அவுட்

18வது ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் விளையாடி வருகின்றன. வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்று வரும் இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 221 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக விராட் கோலி 67 ரன்களும், ரஜத் படிதார் 64 ரன்களும்அடித்தனர். மும்பைதரப்பில்அதிகபட்சமாகஹர்திக்மற்றும்டிரெண்ட் போல்ட்தலா2விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 222 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய மும்பை அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக ரோகித் ரியான் ரிக்கல்டன் களமிறங்கினர்.

இதில் ஆரம்பத்திலேயே அதிரடியாக விளையாடிய ரோகித் சர்மா 9 பந்துகளில் 17 ரன்கள் அடித்த நிலையில் யாஷ் தயாள் பந்தில் போல்டானார். நடப்பு தொடரில் 4 போட்டிகளில் விளையாடியுள்ள ரோகித் வெறும் 38 ரன்கள் மட்டுமே அடித்து தொடர்ந்து சொதப்பி வருகிறார்.

தற்போது வரை மும்பை அணி 4 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 38 ரன்கள் அடித்துள்ளது.

## 'கனிமா' டிரெண்டில் இணைந்த 'லப்பர் பந்து' பட நடிகை



கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'ரெட்ரோ'. பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படம் அடுத்த மாதம் 1 ம் தேதி வெளியாக உள்ளது.

இதற்கிடையில், இப்படத்தின் 2வது பாடலான 'கனிமா..' சில நாட்களுக்கு முன்னதாக வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்று வருகிறது. சமூகவலைதளங்களில் இந்தப் பாடலுக்கு பலரும் ரீல்ஸ் செய்து பதிவிட்டு வருகிறார்கள்.

இந்த டிரெண்டில் தற்போது லப்பர் பந்து பட நடிகை சுவாசிகாவும் இணைந்துள்ளார். தனது இன்ஸ்டா பக்கத்தில் 'கனிமா..'பாடலுக்கு நடமாடி வீடியோ வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

கடந்த 2009ம் ஆண்டு வெளியான 'வைகை' படத்தின் மூலம் தமிழில் நடிகையாக அறிமுகமானவர் சுவாசிகா. அதனையடுத்து, 2012ம் ஆண்டு வெளியான 'சாட்டை' படத்தில் நடித்திருந்தார். அதன்பிறகு எந்த தமிழ் படத்திலும் நடிக்காத சுவாசிகா, சமீபத்தில் வெளியான 'லப்பர் பந்து' படத்தில் நடித்தார். தற்போது இவர் சூர்யாவின் 45வது படத்தில் நடித்து வருகிறார்.

## ஐ.எஸ்.எல். கால்பந்து: மோகன் பகான் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி



11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டியில் கொல்கத்தாவில் நேற்று இரவு நடைபெற்ற 2வது அரையிறுதியின் 2வது சுற்றில் முன்னாள் சாம்பியன் மோகன் பகான் சூப்பர் ஜெயன்ட் ஜாம்ஷெட்பூர் எப்.சி. அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மோகன் பகான் அணி 20 என்ற கோல் கணக்கில் ஜாம்ஷெட்பூரை தோற்கடித்தது. மோகன் பகான்அணிசார்பில்ஜாசன்கம்மிங்ஸ், ரால்டே ஆகியோர் கோல் போட்டனர்.

இதன் முதலாவது சுற்றில் ஜாம்ஷெட்பூர் 21 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது. இரு ஆட்டங்களின் அடிப்படையில் மோகன் பகான் அணி 32 என்ற கோல் வித்தியாசத்தில் ஜாம்ஷெட்பூரை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் கால்பதித்தது. வருகிற 12ந்தேதி கொல்கத்தாவில் நடைபெறும் மகுடத்துக்கான இறுதி ஆட்டத்தில் மோகன்பகான்அணி, பெங்களூரு எப்.சி.யை சந்திக்கிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.